**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.1242/2022**

**வழக்கு சாட்சி D.W.1**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரவணசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்லப்பகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 51 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இவ்வழக்கில் நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளும், நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளும் எனக்கு தெரியும் என்றால் ? தெரியும். எதிர்வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளையும், எதிர்வழக்குரையில் குறிப்பிடாத ஆவணங்களையும் நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சி நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் ? ஆமாம், சொல்லியுள்ளேன். ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எதிர்வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகளையும், எதிர்வழக்குரையில் குறிப்பிடாத ஆவணங்களையும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட சங்கதிகள் மற்றும் ஆவணங்கள் என்றால் ? சரியல்ல. தாவா சொத்தினை தவிர வேறு சொத்தினை நான் வாங்கவில்லை என்றால் ? வாங்கவில்லை. சாட்சி மீண்டும் தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு வாங்கியதாகவும், தாவா சொத்தை வாங்கிய பிறகு சொத்துக்கள் எதுவும் வாங்கவில்லை என்று பதில் அளித்தார். பொதுவாக ஒரு சொத்தினை கிரையம் பெறும் பொழுது அந்த சொத்திற்குரிய கிரைய ஆவணங்கள், வில்லங்கசான்றிதழ்கள் பார்த்து தான் சொத்தினை கிரையம்

வாங்குவோம் என்றால் ? சரிதான். சொத்தினை கிரையம் பெறும் பொழுது மூல ஆவணங்களில் கண்டுள்ள சொத்து விபரத்தை தான் கிரையம் பெறும் ஆவணங்களிலும் சொத்து விபரமாக எழுதப்படும் என்றால் ? சரிதான். மூல ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை மாற்றி கிரையம் பெறும் ஆவணத்தில் சொத்து விபரத்தை எழுதினால் அந்த கிரையம் பெறும் ஆவணம் செல்லாது என்றால் ? சரிதான். செல்லாது. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ? பாதையை பற்றி கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதில், நான்கு எல்லைகளை குறிப்பிடும் போது ஒரு எல்லையினை தவறாக குறிப்பிட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சொத்து விபரத்தில் நான்கு எல்லைகளில் ஒரு எல்லையினை தவறாக குறிப்பிட்டுள்ளதால் மேற்படி ஆவணம் செல்லாது என்று வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு பிழை திருத்தல் பத்திரம் பதிவு செய்துள்ளேன் என்றால் ? சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களின் விபரம் பற்றி தெரியுமா என்றால் ? தெரியும். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ–4 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்து விபரங்கள் சரியானவை தானா என்றால் ? சரிதான். பி.வா.சா.ஆ–1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்து விபரத்தின் தன்மை படி தான் 26.11.2021ம் தேதியிட்ட ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை நான் கிரையம் பெற்றிருக்க வேண்டும் என்றால் ? சரிதான். பி.வா.சா.ஆ–1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் கண்டுள்ள சொத்து விபரத்திற்கு மாறாக பி.வா.சா.ஆ–5 கிரைய ஆவணம் ஏற்பட்டு இருந்தால் அது தவறு என்றால் ? சரிதான். 26.11.2021ம் தேதி நான் வாங்கிய கிரைய ஆவணம் தவறாக இருந்ததால் தான் வாதி மேற்படி கிரைய ஆவணத்தை செல்லாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? சரிதான். சர்வே எண்.51/1M சொத்தினை நான் வாங்கிவிட்டேனா என்றால் ? ஆமாம். அதில் எவ்வளவு சொத்தினை நான் வாங்கியுள்ளேன் என்றால் ? சரியாக நினைவு இல்லை. சர்வே எண்.51/1M ல் கிணற்றடி நிலம்

உள்ளதா என்றால் ? உள்ளது. அதில் 7 செண்ட்டில் சரி பாதி பாத்தியம் தான் எனக்கு உள்ளது என்றால் ? சரிதான். நான் கிரையம் பெற்றுள்ள 7 செண்ட் சொத்திற்கு நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் ? கிழமேல் பாதைக்கும் – வடக்கு, தென்வடல் பாதைக்கும் – மேற்கு, இதே சர்வே எண்ணிற்கும் – தெற்கு, என்னுடைய நிலத்திற்கும் – கிழக்கு. நான் சொன்ன நான்கு எல்லைகளான நிலவியல் அமைப்பில் அப்படியே தான் உள்ளது. சர்வே எண்.51/1M ல் 7 செண்ட் நிலத்தில் கிழக்கு பக்கத்தில் தென்வடல் பாதை உள்ளது என்றால் ? சரியல்ல. சர்வே எண்.51/1M புலத்தின் மையத்தில் தென்வடல் பாதை உள்ளது. சர்வே எண்.51/1M என்ற புலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ? சரியாக எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.51/1M என்ற புலத்தில் 7 செண்ட்டிற்கு கீழ்புறம் தென்வடல் பொதுப்பாதை உள்ளது என்றால் ? சரிதான். நான் பதிவு செய்துள்ள திருத்தல் பத்திரத்தில் சர்வே எண்.51/1M என்ற புலத்தில் 7 செண்ட்டிற்கு கிழக்கு பக்கம் நான்கு எல்லை குறிப்பிடும் போது எந்த சொத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் ? இதே நெம்பரில் கண்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் சர்வே எண்.51/1M என்ற கிணற்றடி நிலத்தில் உள்ள 7 செண்ட் நிலத்திற்கு கிழக்கு எல்லையாக தென்வடல் பொது பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் முந்தைய ஆவணங்களில் கண்ட சொத்து விபரத்திற்கு எதிராக கிரைய ஆவணத்தை எழுதியுள்ளேன் என்றால் ? சரியல்ல. தென்வடல் பொதுப்பாதைக்கு கிழபுறம் உள்ள இடம் வாதி இடம் என்றால் ? சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தையும், வாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதையையும் அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மோசடியாக கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. பி.வா.சா.ஆ–1 முதல் பி.வா.சா.ஆ–4 வரையிலான ஆவணங்களும் 1ம் வாதி, 2–ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் உண்மை என்றால் ? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை

சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் 1 முதல் 6 பாராக்களில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய் என சொல்லப்பட்டுள்ளது சரியல்ல எனவும், அந்த சங்கதிகள் உண்மை அல்ல என்றால் ? சரியல்ல. நான் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு பாத்தியமான சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் எழுதிக்கொண்டதால் அந்த கிரைய ஆவணம் செல்லாது என்றும், அதனால் வழக்கில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.06 17:56:29 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்